செய்தி வெளியீடு எண்: 57 நாள்: 29.08.2019

**தேனி மாவட்டம்,**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்**
**திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட முதல் போக பாசனத்திற்காக**
**வைகை அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்தார்:-**

*****

*மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செல்லூர்கே.ராஜு அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள், ஆகியோர் முன்னிலையில், தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. த.சு.ராஜசேகர் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் தலைமையில் இன்று (29.08.2019) திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்ட முதல் போக பாசனத்திற்காக வைகை அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்தார்.*

***பாசனத்திற்கான தண்ணீரை திறந்து வைத்து, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில்,***

*தமிழக அரசு, கம்பம் பள்ளத்தாக்கு பெரியாறு பிரதானக் கால்வாய் பாசனப் பகுதியின் கீழ் உள்ள இருபோக பாசன பகுதியில் முதல் போக பாசன நிலங்களுக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்தவிட வேண்டும் என்ற வேளாண் பெருங்குடி மக்களின் கோரிக்கையினை ஏற்று, கம்பம் பள்ளத்தாக்கு பெரியாறு பிரதானக் கால்வாய் பாசனப் பகுதியின் கீழ் உள்ள இருபோக பாசன பகுதியில் முதல் போக பாசன பரப்பான 45041 ஏக்கர் நிலங்களுக்கு நாள் ஒன்றுக்கு 900 கனஅடி வீதம், 45 நாட்களுக்கு முழுமையாகவும், 75 நாட்களுக்கு முறை வைத்தும் மொத்தம் 120 நாட்களுக்கு 6739 மில்லியன் கனஅடி தண்ணீரை நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தைப் பொறுத்து இன்று (29.08.2019) முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளது.*

*அதனடிப்படையில், வைகை அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீர் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திற்குட்பட்ட 1,797 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டத்திற்குட்பட்ட 16,452 ஏக்கர் நிலங்களும், மதுரை மாவட்டம், வடக்கு வட்டத்திற்குட்பட்ட 26,792 ஏக்கர் நிலங்களும் என மொத்தம் 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். மேலும், விவசாயப் பெருகுடி மக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற்று பயனடையுமாறு தெரிவித்தார்.*

*இந்நிகழ்வின் போது, தேனி பாராளுமன்ற உறுப்பினர் ப.ரவீந்திரநாத்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.டி.கே.ஜக்கையன், ஆர்.மாணிக்கம், எஸ்.எஸ்.சரவணன், பி.நீதிபதி, செல்வம் என்ற பெரியபுள்ளான், மனோகரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, பொதுப்பணித்துறை (நீர் வள ஆதார அமைப்பு) பெரியாறு வைகை வடிநிலகோட்ட செயற்பொறியாளர் சுப்பிரமணியன், உத்தமபாளையம் சார் ஆட்சியர் டாக்டர் ஆர்.வைத்திநாதன், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் சி.ஜெயப்ரிதா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.பி.எம் சையதுகான், ஆர்.பார்த்திபன், ஆர்.கோபாலகிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.கணேசன், உதவி செயற்பொறியாளர் செல்வம், உதவி பொறியாளர் குபேந்திரன் வேளாண்குடி பெருமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***